**28.11.2023**

**அ.வ.எண். 46/2021**

**வா.சா.1 சங்கர் அவர்களின் குறுக்கு விசாரணை**

**1.** எனது தகப்பனார் பெயர் கன்னிதாஸ் நாயுடு என்றால் சரிதான். அவருடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. தாவா சொத்துக்கள் ஆதியில் கன்னிதாஸ் நாயுடுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் கன்னிதாஸ் நாயுடுக்கு பரம்பரையாக கிடைத்த சொத்துகள். கன்னிதாஸ் நாயுடுக்கு முன்பு தாவா சொத்துகளின் பட்டா வேணுகோபால் நாயுடுவின் பெயரில் இருந்தது.

**2.** வேணுகோபால் நாயுடுக்கு முன்பு தாவா சொத்துகளின் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் தெரியாது. வேணுகோபால் நாயுடுவின் பெயரில் இருந்த பட்டாவினை நான் பார்த்ததில்லை. எனது தகப்பனார் சொல்லிதான் எனக்கு தெரியும். அந்த பட்டா எண் மற்றும் அதில் உள்ள சர்வே எண்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். வேணுகோபால் பெயரில் பட்டா இருந்த விவரத்தினை எனது வழக்கிலும், பிரமாண வாக்குமூலத்திலும் வா.சா.1லும் சொல்லப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது.

3. எனது பாட்டி பெயர் வெங்கடம்மாள் என்றால் சரிதான். வெங்கடம்மாளின் தகப்பனார் பெயர் கோவிந்தராஜிலு நாயுடு என்றால் சரிதான். தாவா சொத்துகள் மற்றும் இதர சொத்துக்களை கோவிந்தராஜிலு நாயுடு 1917ம் மற்றும் 1924ம் வருடங்களில் கிரையம் வாங்கிய சொத்துகள் என்றால் எனக்கு தெரியாது. கோவிந்தராஜிலு நாயுடுக்கு வெங்கடேச நாயுடு, வீரராகவ நாயுடு மற்றும் வெங்கடம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

4. தாவா சொத்துக்கள் எனது தகப்பனாரின் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. வேணுகோபால் நாயுடுதான் தாவா சொத்துகளை அனுபவித்து வந்தார். வேணுகோபால் நாயுடு பெயரில் வருவாய் ஆவணங்களோ, கிரையப்பத்திரங்களோ நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியின் தாயார் பெயர் குப்பாபாய் (எ) குப்பம்மாள் என்றால் சரிதான். மேற்படி குப்பம்மாள், வெங்கடேச நாயுடுவின் மகள் என்றால் சரிதான். எனது தகப்பனார் கன்னிதாஸ் நாயுடு வெங்கடம்மாளின் மகன் என்றால் சரிதான். குப்பாபாய் (எ) குப்பம்மாள் என்பவர் இந்நீதிமன்றத்தில் 1992ம்வருடம் எனது தகப்பனார் மற்றும் மற்ற

நபர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார் என்றால் கேள்விப்பட்டுள்ளேன். தாவா சொத்துகள் சம்பந்தமாகததான் மேற்படி பாகப்பிரிவினை வழக்கு நடந்தது என்றால் சரிதான்.

5. அசல் வழக்கு எண்344/1992 வழக்கில் எனது தகப்பனார் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது தகப்பனாருக்கு தாவா சொத்துக்களில் எவ்வித பாகமும் இல்லை என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் சரியல்ல. ஒரு சில சொத்துகளில் பாகம் உண்டு என்று தீர்ப்பாகியுள்ளதாக எனது தகப்பனார் என்னிடம் கூறினார். அசல் வழக்கு எண்344/1992ல் எனது தகப்பனாருக்கு தாவா சொத்துக்களில் எவ்வித பாகமும் இல்லை என்று தீர்ப்பாகியுள்ளது என்றாலும் எனவே எனது தகப்பனாருக்கு தாவா சொத்துகளில் உரிமையில்லை என்றாலும் அதனடிப்படையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. வருவாய் ஆவணங்கள் சொத்துக்களுக்கு உரிமை மூல ஆவணங்கள் இல்லை என்பதால் எனது தகப்பனார் பெயர் உள்ள வருவாய் ஆவணங்கள் வைத்துக்கொண்டு நானும் எனது தகப்பனாரும் தாவா சொத்துகளில் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல.

6. தாவா 8ம் இன சொத்து எனது தகப்பனாருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அது எனது பாட்டியின் சொத்து. அதன்வழியாக எனது தகப்பனாருக்கு கிடைத்தது. மின்இணைப்பு மற்றும் கிணறு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று எனக்கு தெரியாது. அதற்காக தனியாக ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. மின்இணைப்பு எனது தகப்பனார் பெயரில் உள்ளது. அதற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி குப்பாபாய் (எ) குப்பம்மாள் எனக்கு எதிராகவும் எனது தகப்பனாருக்கு எதிராகவும் மற்றும் மனோகர் என்பவருக்கு எதிராகவும் நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்75/19 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நீதிமன்ற அழைப்பாணை பெற்று நாங்கள் அந்த வழக்கில் ஆஜராகவில்லை என்றால் அந்த வழக்கில் அழைப்பாணை எதுவும் நான் பெறவில்லை. மேற்படி வழக்கு குறித்து எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை, வழக்கறிஞர் கூறி தெரிந்துகொண்டேன்.

**8**. மேற்படி வழக்கில் அழைப்பாணை பெற்றுக்கொண்டு **16.10.2019** அன்று நீதிமன்றத்தில் ஆஜராகததால் எங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றாலும் அழைப்பாணை பெறவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அப்போது நான் சென்னையில் இருந்தேன். **24.07.2020** அன்று மேற்படி வழக்கில் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அதனை ரத்து செய்வதற்கு நாங்கள் மனு தாக்கல் செய்துள்ளோம்.

**9**. மேற்படி வழக்கு தாவா சொத்தில் குப்பாபாய் (எ) குப்பம்மாள் என்பவரின் அனுபவத்தை தடை செய்யக்கூடாது என்றும் நான் தாவா சொத்துக்களை விற்பனை செய்யக்கூடாது என்றும் எனது தகப்பனார் எனக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும் தீர்ப்பாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இன்றைய தேதிவரை மேற்படி தீர்ப்பின் விவரங்கள் குறித்து நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பின் விவரங்களை பிரதிவாதிகள் தங்களது பதிலுரையில் கூறியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

**10**. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையின் விவரங்கள் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பான வழக்கினை ரத்து செய்வதற்கு நான் மனு தாக்கல் செய்துள்ளேன். எப்போது நான் மனு தாக்கல் செய்தேன் என்றால் என் வழக்கறிஞர் கேட்டால் தான் தெரியும். நான் எப்போது மனுவில் கையொப்பம் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. அசல் வழக்கு எண் **344**/**1992** மற்றும் அசல் வழக்கு எண் **75**/**2019** ஆகிய வழக்குகளின் விவரங்கள் நன்கு தெரிந்திருந்தும் நான் இந்த வழக்கில் அதனை சொல்லிவில்லை என்றால் சரியல்ல.

**11**. பழைய வழக்குகளை மறைத்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ **1**ன் அடிப்படையில்தான் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். **30.04.2021**அன்று இந்த வழக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் **28.04.2021**அன்று தாக்கல் செய்தேன். வா.சா.ஆ **1** செல்லத்தக்கதல்ல என்று **05.10.2020** அன்றே நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் வா.சா.ஆ **1**

ரத்து செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ரத்து செய்யப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

12. அதனை ரத்து செய்வதற்கு தான் மனு தாக்கல் செய்துள்ளேன். இன்றைய தேதி வரை அசல் வழக்கு எண்75/2019ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகியுள்ளதால் தாவா சொத்தில் உரிமைகோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே ஒருதலைப்பட்சம் தீர்ப்பு குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

13. வா.சா.ஆ 3 ல் சர்வே எண்20/3 இல்லை என்றால் சரிதான். சர்வே எண் 20/3க்கு பட்டா எண் 40 எனது தகப்பனார் பெயரில் தாக்கலாகி உள்ளது என்று வா.சா.ஆ 1ல் சொல்லப்பட்டது தவறு என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ல் சர்வே எண்20/3 இல்லை என்றால் சரிதான். சர்வே எண்20/1ல் கிணறு மற்றும் பம்பு செட் இருப்பதாக வா.சா.ஆ 4 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

14. சர்வே எண்20/5ல்தான் பம்பு செட் இருப்பதாக வா.சா.ஆ 4ல் கூறியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்20/1ல் கிணறு மற்றும் பம்புசெட் இருப்பதாக இந்த வழக்கிலும், வா.சா.ஆ 1லும் கூறியுள்ளது தவறு என்றால் சரிதான். சர்வே எண்20/3 மற்றும் கிணறு மற்றும் பம்புசெட் குறித்து வா.சா.ஆ 5ல் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்20/3க்கு எனது பாட்டி பெயரில் பட்டா உள்ளது. சர்வே எண்20/3 எங்களுக்கு சொந்தம் இல்லை என்றாலும் அது எனது பாட்டி சொத்து என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

15. வா.சா.ஆ 1 ரத்து செய்யப்பட்ட பிறகு தாவா சொத்துகளை குப்பம்மாள் 1ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார் என்றால் சரிதான். ஆனால் நாங்கள்தான் தாவா சொத்துகளை அனுபவித்து வருகிறோம். தாவா சொத்துகளை நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்பதற்கு வரி ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அது என்னிடம் உள்ளது. ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்வதற்கு நான் தயாராக உள்ளேன்.

**16**. ஒருதலைப்பட்சம் தீர்ப்பு வழங்கப்பட்டதால் தான் இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வேறு எந்த காரணமும் இல்லை என்றாலும் சரிதான். பிரதிவாதிகள் எங்கள் உறவினர்கள் என்றால் சரிதான். **28.04.2021**அன்று **1**ம்பிரதிவாதி பெயரில் புகார் எதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. அன்றைய தேதியில் எனக்கும் **1**ம் பிரதிவாதிக்கும் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். **28.04.2021**அன்று பிரதிவாதிகளை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**17**. ஒருதலைப்பட்சம் தீர்ப்பினை குறித்து இந்த வழக்கில் ஏன் சொல்லவில்லை என்றால் அது எனது வழக்கறிஞருக்குதான் தெரியும். பழைய வழக்கின் தீர்ப்புகள் குறித்து இந்த வழக்கில் கூறியிருந்தால் இந்த வழக்கு நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்படாது என்றுதான் அந்த விவரங்களை நான் மறைத்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை கோவிந்தராஜிலு கிரையம் வாங்கி அவருக்கு பின்பு குப்பம்மாள் அனுபவித்து வந்து தற்போது **1**ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

18. நாங்கள் தான் கரும்பு பயிர் வைத்து அனுபவித்து வருகிறோம். எந்த உரிமையும் இல்லாமல் எனது தகப்பனார் எனக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றாலும் அதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களை எனது தகப்பனார் பயிர் வைத்து அனுபவித்து வந்து தற்போது அதில் நான் பயிர் வைத்து வருகிறேன். முன்பு கரும்பு பயிர் வைத்தேன் தற்போது நெல்பயிர் வைத்துள்ளேன்.

19. நான் சுமார் 40 வருடங்களாக சென்னையில் வசித்து வருகிறேன். எனது குடும்ப அட்டை சென்னை முகவரியில் உள்ளது என்றால் சரிதான். அவ்வப்போது தாவா கிராமத்திற்கு வந்து செல்வேன். எனது ஆதார் முகவரி சென்னை என்றாலும் நான் சென்னையில் வாக்குபதிவு செய்வேன் என்றாலும் சரிதான். நான் தாவா கிராமத்தில் வசித்து வருகிறேன் என்று வழக்கிலும் எனது பிராமண வாக்குமூலத்திலும் நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான்.

**20**. பிரதிவாதிகளிடமிருந்து தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்று நானும் எனது தகப்பனாரும் பொய்யாக செட்டில்மெண்ட் ஆவணம் தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குமூலம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு அதிகட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.